1980 பிப்ரவரி 11]

அய்யன்குளத்திற்கு வரத்துக் கால்வாய்.

குறுகியகால வினா எண் 2— திரு. என். பழனிவேல் : மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி அருகேயுள்ள வரதமாநதி அணையிலிருந்து அந்த அணைக்கு உட்பட்ட அய்யன்குளத்திற்கு புதிய வாய்க்கால் வெட்டுவதற்கான கோரிக்கையை அப் பகுதி விவசாயிகள் வற்புறுத்தி வந்ததை அரசு அறியுமா ?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு :

(அ) மற்றும் (ஆ): மாமரத்து ஓடை அணைக் கட்டிலிருந்து கால்வாய் மூலம் அய்யன்குளத்திற்குத் தண்ணீர் கொண்டுவரப் படுகிறது. அய்யன்குளத்திற்கு வந்து சேரும் மழை நீரும், மாமரத்து ஓடை அணைக் கட்டிலிருந்து வரத்துக்கால்வாய் மூலம் வந்து சேரும் நீரும், அக்குளத்தை நிரப்பப் போதுமான தாலும் வரதமா நதியியிலிருந்து இக் குளத்திற்கு புதிய ஒரு வாய்க்கால் வெட்டத் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

விவசாயிகளது கடன்கள்.

குறுகியகால வினா எண் 3—திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக விவசாயிகளின் கடன்களை ரத்து செய்து விட்டு, பின்னர் இழப்பீடு கோரிக்கை வைத்தால் அதனை பரிசீலிக்கும் என மத்திய விவசாய அமைச்சர் உறுதி கூறியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த உறுதியின் அடிப்படையில் தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) பத்திரிகை செய்தியைத் தவிர, வேறு தகவல் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. வே. இரா. ஜெயராமன்: தலைவரவர்களே, இந்த விவசாயக் கடன்கள் தனியாரிடமிருந்து பெறப்பட்டிருந்தால் அதையும் ரத்து செய்யும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்ட கேள்விகளெல்லாம் கூட்டுறவுக் கடன்களைப் பற்றியது, தனியார் கடன்களைப் பற்றியது அல்ல.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டு விவசாயிகளினுடைய கடன்களை மாநில அரசு ரத்து செய்தால் அதற்கு உறுதுணையாக எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று மத்திய அமைச்சர் இரண்டு மூன்று இடங்களில் பேசியிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். தமிழக விவசாயிகள் கடன்களைக் கட்ட முடியாமல் இருக்கின்ற நிலைமைகளை அமைச்சரவர்கள் அறிவார்கள். எனவே, இந்தக் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்துவிட்டு, ரிசர்வ் பேங்கிலே அந்தக் கடனை ஈடு செய்ய வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை நம்முடைய அரசாங்கம் கேட்டுக் கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, யமத்திய மாநில விவசாய அமைச்சர் கடந்த 1980 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 28 ஆம் நாள் சென்னைக்கு வருகை தந்தபொழுது பத்திரிகை நிருபர்களுடைய கூட்டத்திலே இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதுவரையிலே இந்த அரசுக்கு அதிகாரப்பூர்வமாக எந்தத் தகவலும் அனுப்பப்படவில்லை. அப்படி அனுப்பினால் கண்டிப்பாக இந்த அரசு பரிசீலனை செய்யும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே வாங்கப்பட்ட கடன்களையெல்லாம் கட்ட முடியாமல் இருக்கிறோம் என்று விவசாயிகள் கோரிக்கைகளை எழுப்பிக் கொண்டிருப்பது இன்று நேற்று அல்ல. பழைய அரசிலேயும் இப்படிப்பட்ட கோரிக்கை வைக்கப்பட்டது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாடு அரசு கடன் சம்பந்தமாக மசோதா கொண்டு வரும் இந்தச் சமயத்தில், மத்திய அரசுதான் முந்திக் கொண்டு, தானே கடன்களைத் தீர்க்கத் தயாராக வருவதாக, அந்த முறையிலே இன்றைக்கு அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறது. இதை முன்னுதாரணமாகக் கொண்டு, தமிழக அரசு விவசாயிகளின் பிரச்சனைகளை, கடன்களைத் தீர்ப்பதற்கு, விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு........

1980 பிப்ரவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விரிவுபடுத்த வேண்டாம். சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள்.

திரு. செ. சிவசாமி: அதற்கு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாநில அரசைக் காட்டிலும், மைய அரசுக்கு அதிக அக்கறை இருக்கும் என்றால் கண்டிப்பாக மைய அரசு, ரிசர்வ் வங்கியின் உதவியோடு கடன்களை ரத்து செய்ய முடியும். அப்படி முன் வந்தால் கண்டிப்பாக இந்த அரசு அவர்களுடைய கடமை உணர்வைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. ஆனால், மத்திய அரசு இதுவரையிலே அப்படி எந்த நடவடிக்கையையும் எடுத்ததாகத் தெரியவில்லை. இந்த அரசு மூலம் மத்திய அரசை நாம் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். உடனடியாகக் கடனை வஜா செய்யவும், அதற்குண்டான நடவடிக்கைகளில் ஈடுபடவும் வகைசெய்ய வேண்டுமென்று நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த 9 ஆம் தேதிய "ஹிந்து" பத்திரிகையில் நம்முடைய மத்திய விவசாய அமைச்சர் திரு ஆர். வி. சுவாமி நாதன் அவர்கள், ரிசர்வ் வங்கி துணை கவர்னர் அவர்களைச் சந்தித்து தமிழக விவசாயிகள் கடனில் மூழ்கியிருக்கின்ற சூழ்நிலையைக் கூறி, அதற்கு எப்படி நிவாரணம் அளிக்க வேண்டும் என்று பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். நம்முடைய அமைச்சரவர்கள் இந்தச் செய்தியை அறிவார்களா? அதற்கு முன் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இந்தச் செய்தியையும் கூடப் பத்திரிகையின் மூலமாகத்தான் நானும்கூடப் பார்த்தேனே தவிர, அதிகாரப்பூர்வமாக இது வரையிலே எந்த அறிக்கையோ, எந்தக் கடிதமோ இந்த அரசுக்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களேகூட மத்தியிலேயிருக்கின்ற பிரதம அமைச்சரின் மூலமாகக் கூட கேட்டுக்கொள்ள முடியும். அப்படிக் கேட்டுக்கொண்டு இந்த அரசுக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் உதவி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10.00]

இந்த அரசைப் பொறுத்த அளவிலே, விளைகின்ற விளை பொருளுக்கும் கூட நியாயமான விலையைப் பெற்றுத் தர வேண்டுமென்றுதான் அன்று வந்திருந்த மத்திய அரசின் மாநில விவசாய அமைச்சரிடத்திலும் கூட கூறிக்கொண்டேன்.

வருகின்ற 15 ஆம் தேதி ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்தக் கூட்டத்திலேயும், நான் கலந்துகொள்ள இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு திரு கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் எழுப்பிய பிரச்னைபற்றி ஒரு விளக்கத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். நான்கு நாட்களுக்கு முன்பு முதலமைச்சரவர்களும் நானும் மின்சாரத்துறை அமைச்சரவர்களும் நமது மத்திய நிதி அமைச்சர் (ஆர். வி.) ஆர். வெங்கட்டராமன் அவர்களைச் சந்தித்து இந்தப் பிரச்னைப்பற்றிப் பேசினோம். ரிசர்வ் பாங்க் கவர்னரோடு இதுகுறித்துப் பேசுவதாக அவர்கள் வாக்குறுதி அளித்துள்ளார்கள். ரிசர்வ் பாங்க் கவர்னர் அவர்களைச் சந்தித்து என்னையும் பேசுமாறு கேட்டிருக் கிறார்கள். அனுதாபத்தோடு இந்தப் பிரச்சனையை அணுகு வதாக அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். ஆகவே, நிச்சய மாக மத்திய சர்க்கார் உதவும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

ஆ. உடுக்குறியிடாத வினாக்கள்.

பழனி திருக்கோயில் முடியெடுப்போர் முன்னேற்ற சங்கக்கின் வேண்டுகோள்.

வினா 201 — திரு. எஸ்.ஜே.சாதிக் பாட்சா: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பழனி திருக்கோயில் ஊழியர்கள் மூலம் நேரிடை யாக தலை முடி விற்பனை செய்யவேண்டும் என்று 1977 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 14 ஆம் நாளன்று பழனி திருக் கோயில் முடியெடுப்போர் முன்னேற்ற சங்கம் அரசுக்கு வேண்டுகோள் மனு அனுப்பி இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—(அ) ஆம்.

(ஆ) பழனி திருக்கோயில் முடியெடுப்போர் முன்னேற்றச் சங்கத்தின் செயலாளரை தம் மனுவின்மீதான ஆணைக்கு இந்து சமய அறநிலைத்யதுறை ஆணையாளரை அணுகுமாறு பணிக்கப்பட்டது. ஆனால், அவர் ஆணையாளரை இது குறித்து அணுகவில்லை.